# பெரியாழ்வார் திருமொழி 2-5
## பின்னைமணாளனை
(கண்ணன் குழல் வாரக் காக்கையை வாவெனல்)

162 * பின்னை மணாளனைப் * பேரில் கிடந்தானை *
முன்னை அமரர் * முதல் தனி வித்தினை **
என்னையும் எங்கள் * குடிமுழுது ஆட்கொண்ட *
மன்னனை வந்து குழல்வாராய் அக்காக்காய் * மாதவன்
தன் குழல்வாராய் அக்காக்காய் (1)

163 பேயின் முலையுண்ட * பிள்ளை இவன் முன்னம் *
மாயச் சகடும் * மருதும் இறுத்தவன் **
காயாமலர் வண்ணன் * கண்ணன் கருங்குழல் *
தூய்தாக வந்து குழல்வாராய் அக்காக்காய் * தூமணி
வண்ணன் குழல்வாராய் அக்காக்காய் (2)

164 திண்ணக் கலத்தில் * திரையுறி மேல் வைத்த *
வெண்ணெய் விழுங்கி * விரைய உறங்கிடும் **
அண்ணல் அமரர் * பெருமானை ஆயர் தம் *
கண்ணனை வந்து குழல்வாராய் அக்காக்காய் * கார்முகில்
வண்ணன் குழல்வாராய் அக்காக்காய் (3)

165 பள்ளத்தில் மேயும் * பறவை உருக் கொண்டு *
கள்ள அசுரன் * வருவானைத் தான் கண்டு **
புள்ளிதுவென்று * பொதுக்கோவாய் கீண்டிட்ட *
பிள்ளையை வந்து குழல்வாராய் அக்காக்காய் * பேய்முலை
உண்டான் குழல்வாராய் அக்காக்காய் (4)

166 கற்றினம் மேய்த்துக் * கனிக்கு ஒரு கன்றினை *
பற்றி எறிந்த * பரமன் திருமுடி **
உற்றன பேசி * நீ ஓடித் திரியாதே *
அற்றைக்கும் வந்து குழல்வாராய் அக்காக்காய் * ஆழியான்
தன் குழல்வாராய் அக்காக்காய் (5)

167 கிழக்கில் குடி மன்னர் * கேடிலாதாரை *
அழிப்பான் நினைந்திட்டு * அவ்வாழி அதனால் **
விழிக்கும் அளவிலே * வேரறுத்தானை *
குழற்கு அணியாகக் குழல்வாராய் அக்காக்காய் * கோவிந்தன்
தன் குழல்வாராய் அக்காக்காய் (6)

168 பிண்டத் திரளையும் * பேய்க்கு இட்ட நீர்ச் சோறும் *
உண்டற்கு வேண்டி * நீ ஓடித் திரியாதே **
அண்டத்து அமரர் * பெருமான் அழகமர் *
வண்டொத்திருண்ட குழல்வாராய் அக்காக்காய் * மாயவன்
தன் குழல்வாராய் அக்காக்காய் (7)

169 உந்தி எழுந்த * உருவமலர் தன்னில் *
சந்தச் சதுமுகன் * தன்னைப் படைத்தவன் **
கொந்தக் குழலைக் * குறந்து புளியட்டி *
தந்தத்தின் சீப்பால் குழல்வாராய் அக்காக்காய் *
தாமோதரன் தன் குழல்வாராய் அக்காக்காய் (8)

170 மன்னன் தன் தேவிமார் * கண்டு மகிழ்வெய்த *
முன் இவ்வுலகினை * முற்றும் அளந்தவன் **
பொன்னின் முடியினைப் * பூவணை மேல் வைத்து *
பின்னேயிருந்து குழல்வாராய் அக்காக்காய் *
பேராயிரத்தான் குழல்வாராய் அக்காக்காய் (9)

171 * கண்டார் பழியாமே * அக்காக்காய் * கார்வண்ணன்
வண்டார் குழல் வார * வாவென்ற ஆய்ச்சி சொல் **
விண்தோய் மதிள் * வில்லிபுத்தூர்க் கோன் பட்டன் சொல் *
கொண்டாடிப் பாடக் * குறுகா வினைதாமே (10)